He was a Member of the Tamil Nadu Legislative Council from 1953 to 1964. He was interested in the promotion of Tamil study and cculture, and published the Thirukkural text and ites commentary by Parimelazhagar.

On behalf of this House, I shall convey our deep sense of sorrow to the members of the bereaved families.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

Accordingly, the hon. Members stood in silence for a couple of minutes.

II. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Naxalites.

*1. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the news report that appeared in the Indian Express, dated 2nd August 1969 about the Naxalite bases in Kanyakumari and their activities, has been brought to the notice of the Government;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

நக்ஸல்பாரி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரியிலுள்ள நக்சல்பாரிகளின் தளங்கள் பற்றியும், அவர் களது நடவடிக்கைகள் பற்றியும், 1969-ஆம் ஆகஸ்டுத் திங்கள் 2-ஆம் நாள் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆங்கில நாளிதழில் வெளி வந்த செய்தி அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

(உ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: (அ) ஆம்.

(இ) சில காலமாகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் நக்சல்பாரி நடவடிக் கைகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் கேரள மாநிலத்தையொட்டியுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தின் வடக்குப் பகுதிகளில் மட்டுமே இருக்கின்றன. எனினும் நக்சல்பாரி தளம் எதுவும் அங்கு இயங்குவதாகத் தகவல் இல்லை. ஏனைய மாவட்டங்களிலும், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள தொழிற் பகுதிகளிலும் நக்சல் பாரி நடவடிக்கைகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1970 ஜூன் திங்களில் இரணியல்

காவல் நிலைய எல்லைக்குள் ஒரு வீட்டில் கொள்ளையடிக்க முயன்றதைத் தவிர, கன்னியாகுமரி மாவட்டத்தில் வன்முறைச் செயல்கள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

(உ) இந்நிலையை அரசு தொடர்ந்தும் கூர்ந்தும் கவனித்து வருகின்றது. உரிய இடங்களில் ஒல்லும் எல்லா நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து எடுத்து வந்துள்ளது (வரும்).

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் நக்சல்பாரிகளின் நடவடிக்கை எந்த நிலையில் இருக்கின்றது என்பதையும் அண்மையில் திருச்சியில் குண்டு வைப்பு சம்பவத்திற்குப் பிறகு நக்சல்பாரிகளின் நடவடிக்கை அதிகரித்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பதைப்பற்றித் திட்டவட்டமாக எதுவும் நான் கூறுவதற்கில்லை. திருச்சி சம்பவத்திற்குப் பிறகு அதிகரித்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதையும் அளவிட்டுக் கூறுவதற்கு இயலாது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, நக்சல்பாரி என்பவர்களுக்கும் சாதாரணமாக கொள்ளை, கொலை ஆகிய செயல்களில் ஈடுபடுகிறவர்களுக்கும் இடையே இதுவரையில் எந்தவிதமான வேறுபாட்டை அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கொள்ளை, கொலை போன்ற காரியங்களில் ஈடுபடுகின்ற குற்றவாளிகள் நீண்டநெடுங்காலமாகவே அவைகளில் ஈடுபட்டு அதற்கான தண்டனையையும் அனுபவித்து வருகிறார்கள். நக்சலைட் என்று அழைக்கப்படுகிறவர்கள் ஒரு குறிக்கோள், கொள்கையை வன்முறை மூலமாக நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையில் திட்டமிட்டு அந்தக் காரியங்களைச் செய்கிறார்கள். இதுதான் இப்போது இருக்கிற வேறுபாடாகும்.

திரு. டி. கே. சுப்பையா: தலைவர் அவர்களே, திருச்சி குண்டு சம்பவம் நக்சலைட்டினுல்தான் ஏற்பட்டது என்பது தென்பட்டிருக்கிறதா? அரசாங்கம் அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது பற்றிய புலன் விசாரணை முடிவடைந்து நிரூபிக்கப்படவில்லை.

Chief Secretary.

* 2. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state

(*a*) whether it is a fact that the Government of India have upgraded the post of Chief Secretaries in States;

(*b*) if so, whether the First Member, Board of Revenue whose post was made equivalent to the post of Chief Secretary in our State will also receive the benefit; and

(*c*) if not, what will be his ranking?